# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂමානது

අංක 1967/53 - 2016 මැයි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.05.19

*1967/53 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தச்) சட்டத்தின் "உ" அட்டவணையின் கீழ் 100 (%) சதவீத வரிவிலக்கு அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை அகற்றுவதற்காக சுங்கப் பெறுமதியைக் கணிப்பதற்கான முறை**

*2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தம்) சட்டத்தின் "உ" அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழ், சிறப்புரிமை பெற்றவர்களினால் 100% சதவீத வரி விலக்கு அடிப்படையில் 2015, நவெம்பர் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை அகற்றுவதற்காக சுங்கப் பெறுமதியைக் கணிப்பதற்கான முறை வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் தூதரக அமைப்புகளுக்கும் மாத்திரம் இத்தால் ஏற்புடையதாகும்.*

*அதன் பிரகாரம், இறக்குமதி செய்யும் வேளையில் உள்ளவாறு அத்தகைய வாகனங்களின் சீஜஎப் பெறுமதியிலிருந்து இறக்குமதி செய்யும் காலத்திற்கும் அகற்றும் காலத்திற்கும் இடையிலான பாவிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையிலான ஒரு தேய்மானப் பெறுமதி, கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*அத்தகைய வாகனங்களை அகற்றும் வேளையில் செலுத்தவேண்டிய அரசிறை அறவீடுகள் அத்தகைய வாகனங்களை இறக்குமதி செய்யும் வேளையில் காணப்பட்ட வரி வீதத்தில் கணக்கிடப்படும்.*

**அகற்றல் நோக்கங்களுக்காக 100 (%) சதவீத வரி விலக்கு அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் தேய்மானப் பெறுமதி**

| தயாரிப்புத் திகதியிலிருந்து சிறப்புரிமைபெற்ற பாவனையாளரினால் பாவிக்கப்பட்ட காலப்பகுதி | சீஜஎப் பெறுமதி |
|---|---|
| 1 வருடத்திற்குக் குறைந்தவை | 100% |
| 1 வருடத்திற்கு மேற்பட்டவை 2 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 90% |
| 2 வருடங்களுக்கு மேற்பட்டவை 3 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 85% |
| 3 வருடங்களுக்கு மேற்பட்டவை 4 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 80% |
| 4 வருடங்களுக்கு மேற்பட்டவை 5 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 75% |
| 5 வருடங்களுக்கு மேற்பட்டவை 6 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 70% |
| 6 வருடங்களுக்கு மேற்பட்டவை 7 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 65% |
| 7 வருடங்களுக்கு மேற்பட்டவை 8 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 60% |
| 8 வருடங்களுக்கு மேற்பட்டவை 9 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 55% |
| 9 வருடங்களுக்கு மேற்பட்டவை 10 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவை | 50% |
| 10 வருடங்களுக்கு மேற்பட்டவை | 40% |

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2016, மே 19.*

*6- 244*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*